பெண்கள் தமது மார்பகங்களின் அளவுக்கும் அவற்றின் மலே் கீ ழ் மற்றும் பக்கப்புறமான அசைவுக்கு தகுந்த அளவு இடமளிக்காதும் மார்புக் கச்சுக்களை (bra) அணிவதால் மார்பகங்களில் உள்ள இணையங்கள் (ligaments) இழுபட்டு சிதவைடகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக உடற்பயிற்சிகளின் போது அல்லது விளையாட்டுக்களில் பங்கடெுக்கும் போது அதற்குத் தகுந்த சரியான தயாரிப்புள்ள மார்புக் கச்சுக்களை பெண்கள் அணியத் தவறின் இந்த விளைவு ஏற்படுவது தளிவாக அவதானிக்கப்பட்டுள்ளது.

உடற்பயிற்சியின் போது மார்பகம் கிட்டத்தட்ட 21 சனெ்ரி மீ ற்றர்கள் மலே் - கீ ழ், உள் - வளி மற்றும் பக்கப்புறம் என்று அசயை இடமளிக்கப்பட வணே்டும். ஆனால் பல வகை மார்புக் கச்சுகளும் நிலகை்குத்தான மார்பக அசைவுக்கு இடமளிப்பதில்லை. இதனால் மார்பக இணையங்கள் இழுபட்டு நாளடவைில் அவை சிதவைடயை வழி உண்டாகின்றது என்று கண்டறிந்துள்ளனர்.

அதுமட்டுமன்றி அன்றாட வாழ்விலும் பெண்கள் தங்களின் மார்பக அளவுக்கு ஏற்ப சரியான மார்புக் கச்சுக்களை தரிந்தெ அணிவதில் அக்கறை காட்டுவதும் குறைவு என்று சொல்லப்படுகிறது. பொதுவாக தங்கள் மார்பகங்களை குறிப்பிட்ட அளவில் காண்பிக்க என்றே பெண்கள் அதிகம் மார்புக் கச்சுக்களை தரிவு சயெ்கின்றனர். இதனால் மார்பக நோவு மற்றும் அசளெகரிய உணர்வு என்பன ஏற்பட வாய்ப்புக்கள் உண்டாகின்றன என்றும் தரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களின் வாழ்நாளில் காலத்துக்கு காலம் மார்பகத்தின் பருமனில் ஏற்படும் அளவு மாற்றத்துக்கு ஏற்ப சரியான மார்புக் கச்சுகளை தரே்வு சயெ்து அணியும் பழக்கத்தபை பல பெண்கள் கொணடிருப்பதில்லை என்றும் ஒரே அளவான மார்புக் கச்சயைே எப்போதும் பாவிக்க மறுக்கின்றனர் என்றும் கண்டறிந்துள்ள ஆய்வாளர்கள், இது ஆபத்தானது என்றும் எச்சரிக்கின்றனர்.

குறிப்பாக பால□ட்டும் பெண்கள் மற்றும் மாதவிடாய் நிரந்தரமாக தடபை்பட்ட (menopause) நிலையில் வாழும் பெண்கள் இவற்றில் அதிகம் அக்கறை சயெ்தல் வணே்டும். பெண்களின் மார்பகம் மாதந்தோறும் நிகழும் மாதவிடாய் சக்கர நிகழ்வின் போது ஓமோன்களின் சலெ்வாக்கால் பருமன் மாற்றத்துக்கு இலக்காகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

http://kuruvikal.blogspot.com/2008/07/blog-post_1960.html